# வேலையுலகம்

[கல்வி, தொழில் வழிகாட்டலுக்கு உதவக்கூடியது]

ஆக்கியோன்

**ச. சுப்பிரமணியம்**

(பிரதிக் கல்விப்பணிப்பாளர்)

வெளியீடு:

**- நல்லூர் காகித ஆலை -**

யாழ்ப்பாணம்

94-7-22

247.8

தேசிய
மாநகர நூலக சேவை
ப்பாணம்

5-001.

# வேலை உலகம்

******************

(தொழில் வழிகாட்டி)

ஸ்ரீ சரவணை நாகேஸ்வரி மகா வித்.
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

"பாடசாலைகள், தமது பிரதேச மூல வளங்களைப் பெருமதிமிக்க உற்பத்திகளாக்கக்கூடிய மனித வளத்தை உருவாக்குவதிலேயே எமது தற்சார்புப் பொருண்மிய மேம்பாடு தங்கியுள்ளது."

247.8

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

***

ஆக்கம்

ச. சுப்பிரமணியம்

பிரதிக் கல்விப் பணிப்பாளர்

தொழில்நுட்பம், முறைசாராக் கல்வி

<u>இந்நூலின் பின்னணி</u>

இன்றைய கல்வி முறையில் உள்ள குறைபாடுகளில் முக்கிய அம்சமாகக் கருதப்படுவது நடைமுறை வாழ்க்கைக்கும் - கல்விக்கும் இடையில் காணப்படும் மிக நீண்ட இடைவெளியேயாகும்.

தற்போது வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அறிவுத்திறன் மனப்பாங்குகளைத் திட்டமிட்ட முறையில் மாணவரிடம் வளர்ப்பதில் பாடசாலைகள் பெருமளவு அக்கறை காட்டவில்லை.

பொதுக்கல்விக்கும், சிறப்புக்கல்விக்குமிடையில் இருக்கவேண்டிய வேறுபாடுகள், ஒற்றுமைகள் சரியாக இனங்காணப்படவில்லை. பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகவுள்ள சில நூறு மாணவருக்கான பாடத்திட்டங்களைப் பொதுக்கல்வியில் சேர்த்துவிட்டது அவர்களுக்கு ஏற்றவிதத்திலும் பரீட்சை நோக்கிலும் கற்பித்தல் முறைகளைத் தேர்ந்தெடுத்துக் கற்பிக்கப்படும் பல இலட்சம் மாணவரின் அடிப்படைக் கல்வி உரிமைக்குப் பாதகமாக அமைகின்றன.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆண்டு 1 இல் சேரும் 20000 மாணவரில் 10000 பேர் ஆண்டு 11க்கு முன்னரே இடைவிலகிச் செல்வதும் மீதமான 10000 பேரில் 3000 - 4000 பேர் உயர்தர வகுப்பிற்குப் தெரிவாவதும் அவர்களில் 400 பேர் மட்டுமே பல்கலைக்கழகத்திற்குச் செல்வதும் கவனத்திற்கு எடுக்க வேண்டும்.

வருடாந்தம் 19600 பேர் கல்வியுலகிலிருந்து வீட்டுக்கு வருகிறார்கள். இவர்கள் வேலையுலகில் எவ்வேலைக்குப் பொருத்தமானவர்களாக வெளியேறுகிறார்களென்பது கேள்வியாகும்.

எல்லோரும் அடிப்படைக்கல்வியைப் பெறுவதும் அவர்கள் தமது சிறப்பாற்றலுக்கு ஏற்ற தொழிலைத் தெரிவதற்கும் சிறப்புக் கல்வி அவசியமாகிறது. சிறப்புக் கல்விக்குரிய வழிகாட்டல், தனியாரின் சிறப்பாற்றல் அடிப்படையிலும் இருக்கக்கூடிய தொழில்வாய்ப்படிப்படையிலும் அமைய வேண்டுமேயன்றி "மோதிரத்துக்கு ஏற்ற கைவிரலாக இருக்க முடியாது ".

எமது பிரதேசத்தில் இருக்கக்கூடிய பல்லாயிரம் தொழில்களை மாணவர் அறியாமல் இருப்பதும் தமது சிறப்பாற்றல் எத்துறையில் உள்ளது எனத் தெரியாமல் பொருத்தமற்ற சிறப்புக் கல்வியைத் தெரிந்துவிட்டு அலைவதும் சிறந்த பெறுபேறு அல்ல.

எனவே எமது மாணவர்களின் ஆற்றலுக்கேற்ப இங்கு காணப்படும் பல்வேறு தொழிற்றுறையிலும், பதவியணியிலும் பணியாற்ற வழிகாட்டப்படவேண்டும்.

உள்ளூர் மூலவளங்களைப் பெறுமதிமிக்க உற்பத்திகளாக்குவதிலேயே எமது தற்சார்புப் பொருண்மியம் தங்கியுள்ளதால் உற்பத்திசார் தொழிற்றுறைகளில் மாணவர்கள் தொழிலாற்ற வழிநடத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

அதன் பொருட்டு ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வேலையுலகம் பற்றிய அறிவு அவசியமாகிறது. அதனை நிறைவு செய்ய இந்நூல் ஆரம்பமுயற்சி செய்துள்ளது. காலகெதியில் இந்நூல் விரிவாக்கம் பெறும்போது கல்வி தொழில் வழிகாட்டல் எனும் நூலுக்கு அடிகோலும் என நம்புகிறேன்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்
திட்டமிடல்,
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்

22.03.90.

## அணிந்துரை

சந்தி மதகுகளில் குந்தி இருந்துகொண்டு கொண்டுரஞ்சிச் சுகங்காணும் சோம்பேறிச் சமூகம் ஒன்றின் சுகச்சுருக்கட்டல் நாட்டுக்குக் கெடுதல் விளைவிக்கும். வேலையற்ற இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பு இல்லையே என ஓலமிடும் பட்டம் பெற்ற படித்தவர்கள் நமது சமுதாய வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் குந்தகமான புல்லுருவிகள் இந்த நிலை இனிமேலும் தொடர அனுமதித்தல் ஆகாது.

காலத்திற்குக் காலம் தொழில்நுட்பக் கல்விக்கும், தொழில் முன்னிலைக் கல்விக்கும், முறைசாராக் கல்விக்கும் எனக் கல்வி அமைச்சாலும், ஸ்ரீலங்கா அரசினாலும் வகுக்கப்பெற்ற திட்டங்களும் எடுத்த முயற்சிகளும் ஏராளமாக இருந்தபோதிலும், தேறிய பலாபலன் மலையைக் கல்லி எலியைப் பிடித்த கதையாகவே உணரப்படுகிறது.

இத்தகைய பின்புலத்தில், வேலை உலகில் விழிப்புணர்வை ஊட்டிப் புதிய இரத்தம் பாய்ச்சப்பெற வேண்டியது காலத்தின் இன்றியமையாத தேவையாகும். இப்பாரிய முதன்மைமிக்க புனிதப் பணிக்குப் பெரும் பங்களிப்பாக யாழ்ப்பாணம் வலயம் ஒன்றின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. சுப்பிரமணியம் அவர்களின் "வேலை உலகம்" எனும் நூல் அமைந்துள்ளது.

இ. சிவானந்தன்
..................

பிரதிக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம் வலயம்-1.

## முன்னுரை

நாட்டின் வளர்ச்சிக்கான அத்திபாரங் கல்வியில் தங்கி யுள்ளது. கல்வி நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் வழி சமைப்பதாக அமையும்.

எமது நாட்டின் கல்வி முறையும் காலத்துக்குக் காலம் மாற்றம், சீர்திருத்தத்துக்கு உள்ளாகி வருகின்றது. இம் மாற்றங்கள் அரசியல் மாற்றங்களோடு சேர்ந்து வருவதால் அதில் அரசியல் நோக்கங்களும் சேர்ந்தே காணப்படுகின்றது. இதன் காரணமாகத் திட்டங்கள் மாறிவந்தபோதும் மக்களின் வாழ்க்கைத் தரத்திலும், வளர்ச்சியிலும் பெருமாற்றங்கள் தெரியவில்லை. பல பத்து ஆண்டுகளாக நிலவி வரும் வேலையில்லாப் பிரச்சனை சனத்தொகை அதிகரிப்பு வீதத்திலும் பலமடங்கு உயர்ந்தே காணப்படுகின்றது.

விசேடமாகக் கற்றறிந்தோர் மட்டத்தில் வேலையில் லாப் பிரச்சனை அதிகரிப்பதும், பின்னர் அதனைக் குறைப்பதற் காகக் கல்வித்துறையில் ஆசிரியர்களைப் பல்லாயிரம் பேரை இணைத்துவிடுவதும் ஏனையவர்கள் வேலையற்றவர்களாகவே அலைவதும் கண்கூடு.

கற்றறிந்தோர் மட்டத்தில் வேலையில்லாப் பிரச்சனை குறைவதற்குப் பதிலாக அதிகரித்துச் செல்வது கல்வியின் பொருத்தப்பாடு பற்றிச் சிந்திக்க வைக்கின்றது. மாணவனின் பொருளாதார மேம்பாட்டிற்கான அத்திபாரத்தை இடுவதிலும் பாடசாலைச் கல்வி முக்கிய பங்காற்றுகிறது.

தொழில்சார்ந்த மனப்பாங்கு, தொழில்பற்றிய அடிப்படையறிவு செயல்திறன்களை மாணவரிடம் வளர்த்துவிடுவதில் கல்விக்குப் பெரும் பொறுப்பு பொதுக்கல்வியில் உண்டு. தொழில் சார்ந்த அறிவு, திறன் மனப்பாங்கைப் பொருத்தமானபடி வளர்த்துக் கொள்ளாத மாணவர்களும், தமது சிறப்பாற்றலுக்கு அமையப் பொருத்தமான சிறப்புக்கல்வியைத் தெரிந்துகொள்ளாமையும் வேலையில்லாப் பிரச்சனைக்கும், தொழிலில் மிளிராமைக்கும் ஒரு காரணமாகஅமைவதால் பாடசாலைக் கல்வியில் தொழில் வழிகாட்டல் முக்கியத்துவம் பெறுகிறது. தொழில் வழிகாட்டல் தற்சமயம் முறையாகப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படா மல் உள்ளது யாவரும் அறிந்த விடயமாகும். இதன் முக்கியத் துவம் உணர்ந்தவர்கள்கூட இதனையொட்டி அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் வேலையற்றிருக்கும் இளைஞர்களும், பாடசாலையில் சிறப்புக் கல்விக்கான தொழிற்பாடங்களைத் தெரிவு செய்பவர்களும், வேலையுலகம் பற்றிய பரந்த அறிவு பற்றாக்குறையால் பொருத்தமற்ற பாடங்களைத் தெரிந்து கற்றுவிட்டுத் தொழிலின்றி அலைவதை நாம் காண்கின்றோம். அது அவர்களின் குறையன்று. பொருத்தமற்ற வழிகாட்டலின் மையே காரணமாகின்றது.

எமது இளைய சமுதாயம் தனது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சுதந்திரத்தைக் கொண்டுள்ளபோதிலும், அச் சுதந்திரம் அவருக்கும், நாட்டுக்கும் முழுச் சமுதாயத்திற்கும் நன்மை தருவதாக அமையவேண்டும்.

கல்விக்கான முதலீடு, வரவு, செலவு கணக்குப் பார்க்கப்படவேண்டியது வரவில்லாத செலவால் பயனேதுமில்லை. அது விரயம் எனவே கொள்ளவேண்டும்.

எனவே எமது மாணவர்கள், இளைஞர்கள் தமது பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளவும், உள்நாட்டிலேயே தொழிலைத் தேடிக்கொள்ளவும் இங்கு நிறைய வாய்ப்புக்கள் உண்டு. அதிகம் படிக்காமலே செய்யக்கூடிய தொழில்களே அதிகம் உண்டு. ஆனால் அதிகம் படித்துள்ளாலும்சரி, படிக்காம லிருந்தாலும்சரி யாரும் தமதும் நாட்டுக்குக்கும் பாரமாக விருக்காது உழைக்கும் வல்லமை வேண்டும். இவ்வல்லமையை உயர்த்த வழிகாட்டவேண்டிய கல்வி உலகத்தினர் ஒரு சில துறைகளைமட்டும் சிறப்புக் கல்விக்கான வாய்ப்புக்களாகக் காட்டி மாணவரைத் திசைமாற்றிவிடுவதும் பயன் தராது.

பரந்த உலகில் பரந்துபட்ட தொழிற்துறைகள் உள்ளனவென்பதையும் அங்கு பலவித பதவியணிகள் உள்ளன என்பதையும் அத்தொழில் பற்றிய மேலோட்டமான அறிவையும் அடிப்படைத் தகுதிகளையும், சிறப்பாகத் தகுதியையும் இந்நூல் காட்டுகிறது. ஆசிரியர், மாணவர்,

வேலைதேடும் இளைஞர்களுக்கு இது ஆதாரமாக அமையும் என நம்புகிறோம். இவ் அடிப்படையான விடயங்களை வைத்துக்கொண்டு மேலும் ஆராயும் போது அல்லது தேடும் போது விரிவான அறிவுக்கு வழிகாட்டும் என நம்புகிறேன்.

ச. சுப்பிரமணியம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
திட்டமிடல்,
கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்

22.03.90

## 1) உங்கள் பொருளாதாரம் உங்கள் கைகளில்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத்தேவைகளுக்காகவும், சுகநலம், பொழுதுபோக்கு, கல்வி, போன்ற ஏனைய வசதிகளை உயர்த்திக் கொள்ளவும் பொருளாதாரத்தைத் தேடவேண்டியவனாகவிருக்கிறான்.

பொருளாதாரத்தைத் தேடிக்கொள்வதற்கு ஒவ்வொருவரும் ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. இத்தொழிற்தேர்வுக்குப் பின்வரும் காரணிகள் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

### 1.1. சிறப்பாற்றல்

பிறக்கும் ஒவ்வொரு உடல், உள ரீதியாக வேறுபட்டவர்களாகவுள்ளனர். இவர்களின் பொதுவான குணநலன்களும், சிறப்பாற்றல்களும் வேறுபட்டதாகவும் வேறுபட்ட பரிமாணங்களில் உள்ளதையும் அவதானிக்கின்றோம்.

ஒவ்வொருவரிலும் இருக்கக்கூடிய சிறப்பாற்றலையும் திறன்களையும் வளர்த்துச் சமூகப் பொருத்தப்பாடுள்ள பூரண மனிதனாக்குவதை எமது கல்வி நோக்கம் கொண்டுள்ளது. இதன் காரணத்தால்

பாடசாலை மாணவருக்கு வழங்கப்படும் அடிப்படைக்கல்வியூடாகப் பொதுவான திறன் விருத்திக்கும், சிறப்பாற்றல் விருத்திக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன.

அடிப்படைக்கல்விப் பருவத்தில் இனங்காணப்பட்ட சிறப்பாற்றல் அடிப்படையில் சிறப்புக்கல்விக்கு வழி காட்டப்படும்.

பொதுவாகவே ஆடுதல், பாடுதல், பேசுதல், கவிதை எழுதுதல், நடித்தல், பெறிமுறைவேலைகளில் ஈடுபடுதல், விளையாட்டு, கைவினைவாத்தியங்களைக் கையாளல் போன்ற பல செயற்பாடுகளில் பாடசாலை சிறுவர்கள் ஈடுபாடுகாட்டுவதுண்டு. எனினும் இவர்களில் சிலரோ அல்லது பலரோ முன்னர் உதாரணமாகக் கூறப் பட்ட சில செயற்பாடுகளில் சிலர் அதிவிசேட நாட்டம் காட்டுவர். அதன் விளைவாக அத்துறையில் தமக்கிருக்கக் கூடிய சிறப்பாற்றலை வெளிப்படுத்துவர். உதாரணமாக சிறப்பாகப் பாடுவதன் மூலம் சிலர் தமது சிறப்பாற்றலை வெளிப்படுத்துவர். இது போன்றே ஒவ்வொருவரும் வெவ் வேறு துறைகளில் தமது சிறப்பாற்றலை வெளிப்படுத்துவதை நாம் காண்கிறோம். சில சந்தர்ப்பங்களில் ஒருவர் பல சிறப்பாற்றலை வெளிப்படுத்துவதும் கூட உண்டு.

இவ்வாறு இனங்காணப்பட்ட சிறப்பாற்றலை மேலும் வளர்க்கக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதே சிறப்புக் கல்வியாகும். தனது சிறப்பாற்றலுக்குப் பொருத்தமான சிறப்புக் கல்வியை பெறும் ஒருவரே அத்துறையில் மிளிர முடியும். ஏனையவர்கள் மிளிர்வது அபூர்வமாகவே இருக்கும்.

சிறப்புக் கல்விக்கான தெரிவு கவனமாக மேற்கொள்ளப்படாவிடில் அக்கல்விக்கான நிதி விரயமாவதோடு சமூகத்துக்கும் குறிப்பிட்ட நபருக்கும் கூட எதிர்பார்க்கப்பட்ட பயன் கிட்டாமல் போகும்.

சிறப்பாற்றலடிப்படையில், தனது தொழிலைத் தெரிந்து கொள்ளுமொருவர் அத்தொழிலில் மிளிருவதோடு அத்தொழிலில் விருத்தியும் அடைவதனால் அவரின் பொருளாதாரம் விருத்தியடையும். அத்தோடு அத்தொழில் துறையும் விருத்தியடையும். இதனால் சமூகமும் நலம்பெறும். எனவே ஒருவர் தான் என்ன தொழிலைத் தெரிவது அல்லது எத்துறையில் சிறப்புக் கல்வியை பெறுவது என்பவற்றைத் தீர்மானிக்குமுன் தனது சிறப்பு ஆற்றலை இனங்காண்பது சாலச்சிறந்தது. இதனடிப்படையிலேயே பாடசாலைகளில் மாணவர் வரலாற்றுக் குறிப்புகள் பேணப்படுகின்றன. இவை மாணவரின் வளர்ச்சிக் கட்டங்கள் ஒவ்வொன்றிலும் மாணவரின் வெளிப்பாடுகள், கெட்டித்தனங்கள், உடல், உள விருத்தி யாவும் திட்டமிட்ட மதிப்பீட்டு திட்டங்கள் மூலம் மதிப்பிடப்பட்டுப் பதிவு

செய்யப்படும். இப்பதிவுகளை மதிப்பிடும் விற்பன்னரால் மாணவரின் சிறப்பாற்றல் இனங்காணப்படும். அதனடிப் படையில் அத்துறையில் திட்டமிட்ட ஊக்குவிப்புச் செய்யப் படும். குறிப்பிட்ட மாணவரும் தனது ஆற்றலை அறிந்து கொள்வர். அதுபோலவே பெற்றோரும் ஆசிரியரும் அறிந்து கொள்வர். இவ்வறிவு மாணவர் தங்களைத்தானே வழி நடத்தவும் பெற்றோர் தமது பிள்ளையை வழி நடத்தவும் உதவும்.

### 1.2 குறிப்பிட்ட தொழிற்றுறை / தொழிலால் கிடைக்கக் கூடிய வருமானம்

சிறப்பாற்றலுக்குப் பொருத்தமான தொழிற் றுறையை அல்லது தொழிலைத் தெரிவு செய்யும்போது அத்தொழிலால் கிடைக்கக்கூடிய வருமானம் எதிர் காலத்தில் தொழில் விருத்திக்கு இடமுண்டா என்பதும், குறிப்பிட்ட தொழிலுக்கு இப்போது இருக்கக்கூடிய கேள்வி (கிராக்கி) உற்பத்தித் தொழிலாயின், அதற்குத் தேவையான மூலப்பொருள், உபகரணங்கள், உண்டா என்பதும், உற்பத்திகளைச் சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப்புண்டா என்பதும் கூட ஆராயப்படவேண்டும். தற் போதுள்ள தொழிலுக்கு இன்றுள்ள சூழ்நிலை வாய்ப்பில் லாவிடில். சிறப்பாற்றலைப் பயன்படுத்தி எவ்வாறு வாய்ப்புகள் தாக்கலாம் என ஆராய்ந்து பொருத் தமான தீர்மானங்களை எடுக்கக்கூடியதாக இருத்தல் அவசியமாகும். கிடைக்கக்கூடிய வருமானம் ஏனைய தொழில் துறையில் கிடைக்கும் வருமானத்துக்கும் இடையி இடையிலான வேறுபாடுகளையும் கிடைக்கும் வருமானம் தனது பொதுவான தேவைகளை நிறைவு செய்யுமாக என்ப தும் அவதானிக்கப்பட வேண்டும்.

## 1.3 தொழிலுக்கான முதலீடு

ஒருவர் தெரிவு செய்யும் தொழில் அல்லது தொழிற் துறையானது சேவைத் தொழிலாகவோ, அல்லது பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாகவோ இருக்கக்கூடும். தொழிலின் தன்மைக்கேற்ப முதலீடும் அதன் தன்மையிலும் அளவிலும் வேறுபட்டதாக இருக்கக்கூடும். உதாரணமாக சைக்கிளைத் திருத்தும் சேவையை வழங்கும் ஒருவருக்கு அதற்கான கருவி உபகரணங்கள் தேவை. அதற்கான பணமுதலீடும் தேவைப்படும். விவசாய உற்பத்தியிலீடுபடும் ஒருவருக்கு விளைநிலம், கருவி உபகரணங்கள் விதை, பசளை, கிருமிநாசினி, கூலி போன்றவற்றிற்கான முதலீடு தேவை.

இம்முதலீட்டின் முக்கியத்துவத்தையும் அளவையும் அடிப்படையாகக் கொண்டதாக வருமானமும் அமையும். பல்லாயிரம் ரூபாவை முதலீடு செய்யும் ஒருவர் அதற்கேற்ற வருமானத்தை எதிர்பார்ப்பார். சில நூறு ரூபாவை முதலீடு செய்யும் ஒருவன் அதற்கேற்றளவு வருமானத்தையும் பெறுவார். அதுபோலவே சேவையின், நுட்பத்தின் அடிப்படையிலும், வேலைகள், சந்தைவாய்ப்புக்களை அடிப்படையாகவும் கொண்டு அதற்கான வருமானம் அமையும்.

எனவே தொழிலைத் தெரியும் ஒருவர் குறிப்பிட்ட தொழிலுக்கான பண முதலீட்டையோ, அல்லது உழைப்பையோ வழங்கக்கூடிய வாய்ப்பிருந்தாலே தொழில் நடாத்தி விருத்தியடைய வாய்ப்புண்டாகும். எனவே தொழில் தெரியுமுன்னர் பொருத்தமான ஆய்வின் மூலமே தொழில் தெரிவை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

பொருள் உற்பத்தி தொடர்பான தொழில்களைப் பொறுத்தளவில் உற்பத்திச் செலவு, உபகரணச் செலவு கட்டிட தளபாடச் செலவு மட்டுமல்ல, உற்பத்திகளை விற்றுக் காசாக்கும் காலம்வரை தொழிலாளர் சம்பளம், மூலப் பொருட் செலவு விளம்பரம், யாவற்றுக்கும் கூட முதலீடு தேவைப்படுமாதலால் அவற்றையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

1.4. <u>சந்தைவாய்ப்பு</u>

பெறுமதிமிக்க பொருளாயினும்சரி, சேவையாயினும் சரி இரண்டையுமே சந்தைப்படுத்தக்கூடியவாய்ப்பு எக்காலத்தும் ஒரே சீராகவிருக்காவிடினும் ஏற்ற இறக்கங்களுக்கு அமையவும் சூழ்நிலைக்கேற்பவும் ஏற்படும் நடைமுறைகளைக் [illegible] கொள்ளுதல் மூலம் வருமானம் [illegible] தேவை மிக முக்கியமாகும். உதாரணமாக புகையிலை விளைவித்து ஏற்றுமதி செய்து வருமானத்தைப் பெற்ற கந்த ஒருவன் ஏற்றுமதி வாய்ப்பில்லாதவிடத்து விற்பனையாகக் கூடிய காய்கறிச் செய்கை அல்லது தானியச் செய்கை மூலம் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். எனவே சந்தை வாய்ப்புக்கு அமையத் தன்னை வழிநடத்தக்கூடிய [illegible] வாய்ப்புக்கள் மிக [illegible] ய ஆற்றலும் தேவை[illegible]

[illegible]

[illegible] ஒருவர் உயர் கல்வி [illegible] குறிப்பிட்ட தொழிலைச் செய்வதில் மனத் திருப்தி [illegible] யிருந்தல் முக்கியமாகும். தொழில் [illegible] கொண் தொழில் செய்வதில் [illegible] வதில் சிரத்தையும் [illegible] ப்பும். தொழில் பற்றிய நல்ல [illegible]

மதிப்பும் தொழிலறிவும் கொண்டவராலேயே தொழில் முறை யாகச் செய்யப்படும். அதனால் உற்பத்தியின் தரமும் வெளிப்பயன் விளைவும், உயர்ந்ததாகவிருந்தால் மட்டுமே எத்தொழிலும் வெற்றிகாணலாம். தெரிவு செய்த தொழிலை பேணிக் கொள்வதமட்டுமல்ல விருத்தி செய்து கொள்ளவும் வேண்டியிருப்பதால் தொழில்களிலும் தொழிலாளரிலும் உயர்வு தாழ்வு காட்டாத மனப்பக்குவம் இல்லாத ஒருவரால் தொழிலில் விருத்தி காணமுடியாது.

குறிப்பிட்ட தொழில் பற்றிய நல்மனப்பாங்கு மிக்க ஒருவர் தனது சிறப்பாற்றலைக்காட்டக்கிடைத்த தொழிலை கௌரவப்படுத்தி மதிப்பளிப்பார். அதுபோலே எத்தொழில் செய்வோரையும் சம்மதிப்பளிப்பார். அவராலேயே [illegible] மேன்மையுறமுடியும். தொழிலால் மனிதனும், [illegible] தொழிலும் விருத்தியடைய நல்மனப் பாங்கு பெரும் [illegible].

## 1.6 கல்விச் சான்றிதழ்

ஒரு தொழிலைத் தாமாக மேற்கொள்ள கல்விச் சான்றிதழ் எதுவும் யாராலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கேட்கப்படுவதில்லை. சான்றிதழ் எனப்படுவது ஒருவரின் அ[illegible] [illegible]படுத்தும் பத்திர மாகும். [illegible] [illegible]ப்பீட்டின் அடிப்படையில் தே[illegible] [illegible]ளியை பெரும் பொருவருக்குச் [illegible] பல காரணங் களுக்காக ஒருவருக்குச் சான்றிதழ் தேவைப்படலாம்.

1. ஒருவர் தனது தகுதி நிலையை மதிப்பிட்டுக்கொள்வதற்கு
2. குறிப்பிட்டவொரு தொழிலாளியின் சேவையைப் பெற விரும்புபவர் தொழிலாளியின் அடிப்படைத் தகுதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு
3. தொழிலாளியொருவர் பொது மக்களுக்குத் தனது சேவையை வழங்கவிரும்பின் தனது தகுதியை உள்ளூராட்சி மன்றத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு.
4. தொடரும் கல்வியை பெற விரும்பும் ஒருவர், தனது அடிப்படைத் தகைமையைக் குறிப்பிட்ட கல்வி நிறுவனத்துக்கு நிரூபிப்பதற்கு.
5. இந்நிலையில் தொழிலைச் சிறப்புறவும் உச்சப்பயன் கிடைக்கக்கூடியதாகவும் செய்வதற்குக் கல்வி தேவைப்படும் எனினும் நாட்டில் ஆற்றப்படும் தொழில்களில் பல தொழில்கள் சான்றிதழ்களை வேண்டுவனவாகவில்லை. உதாரணமாக; சுயமாக விவசாய, கடல், கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் சான்றிதழ்கள் இல்லாமலே தொழிலாற்றுகின்றனர். அரச, தனியார் பொது நிறுவனங்களில் ஒரு வேலையாளாகச் செல்லுமொருவர் தனது தகுதியை நிரூபிக்கச் சான்றிதழே உதவுகிறது. இருப்பினும் குறிப்பிட்ட குறைந்த தொகையான காலியிடங்களுக்கு ஆட்களைத் தெரியும்போது ஒரே தகைமைச் சான்றிதழ்களைக் கொண்டவரிடையே தொழில்கள் தெரிவுப் பரீட்சையும் நேர்முகப்பரீட்சையும் கூட நடைபெறுகிறது.

இதன் மூலம் விளங்குவது யாதெனில்; எந்தத் தொழில் நிறுவன
மும் தமது இலக்கையடைய உச்ச சேவையைத் தரக்கூடிய
ஆட்களைத் தெரிவு செய்வதிலேயே குறியாகவுள்ளன.

எந்தவொரு மனிதனும் தனது தொழிலாற்றலை விருத்தி
செய்து கொள்ளக் கல்வியறிவு தேவைப்படுகிறது. ஒருவர்
சுயமாகவே கல்வியறிவைத் தேடிக்கொள்ள முடியுமெனினும்,
பல லட்சம் பேர் பல நூற்றாண்டுகளாகத் தேடியும், ஆராய்
ந்தும், கண்டறிந்த அறிவு, அனுபவங்களையெல்லாம், சுயமாகவே
கண்டறிய நீண்டகாலமும் பெரும் பணச் செலவும் தேவைப்படும்.
இதன் காரணமாகவே மற்றவர்களின் அறிவு அனுபவங்களைக்
கல்வி முறைமையினூடாகக் கற்க வாய்ப்புள்ளது.

### 2. தொழிற் கல்வியைத் தெரிவு செய்தல்

தொழிற் கல்வியறிவைப் பெற முனையும் ஒருவர்
பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

### 2.1. தொழில் பற்றிய அறிவு

எந்தவொரு தொழிலுக்கும் ஒரு வரலாறும் வளர்ச்சியும்
உண்டு. அதனுடன் அத்தொழிலின் முக்கிய தொழிற்பிரிவுகள்,
உபபிரிவுகள், அப்பிரிவுகளின் செயற்பாடுகள், அதற்குத்
தேவையான மூலப் பொருட்கள் கருவியுபகரணங்கள் போன்றவை
மட்டுமன்றி, அத்தொழிற்பிரிவுகளில் பணிபுரிவோர் அவர்களின்
கடமைகள், தகுதிகள், கிடைக்கும் வேதனம் போன்றவற்றின்
அறிவையும் பெற வேண்டியது அவசியமாகிறது. இவ்வறிவைக்
கொண்டிராத ஒருவர் வேலையைத்தேடிக்கொள்வது சிரமமாகும்.

தற்போதுள்ள பாடத்திட்டங்களில் இப்பகுதி சேர்க்கப் படாமல் உள்ளதும் படித்தவர்கள் மட்டத்தில் நிலவும் வேலையில்லாப் பிரச்சனைக்கு ஒருகாரணமாக அமைகின்றது.

## 2.2. செயல்முறைத்திறன்

எந்தக்காரியத்தைச் செய்வதாயினும் அறிமுறையறிவுடன் செயல்முறையான அறிவும் அவசியமாகும். செயல்திறனென்பது; தனது புலன்களைப் பயன்படுத்திக் காரியத்தை நிறைவேற்றுவது ஆகும். இது ஒரு பொருளை ஆக்குவதாயினும் சரி, ஒரு சேவையை நிறைவு செய்வதாயினும்சரி, ஒப்படைத்தவேலையை மற்றவர்களின் தயவுக்காக எதிர்பார்க்காது நிறைவு செய்யுமாற்றலாகும்.

இச் செயல்முறைத்திறன் அற்ற பலரால் அறிமுறை அறிவு இருந்தபோதும் சுயமாக வேலையைத் தேடவோ, அல்லது அறிவைப் பயன்படுத்திக் காரியமாற்றவோ, வேண்டிய தன்னம்பிக்கை அற்றவராக இருப்பார். படித்துச்சான்றிதழ் பெற்ற பலர் இச்செயல் முறைத்திறன் பற்றாக்குறையினால் வேலையைத் தேடிக் கொள்ள முடியாமல் உள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

பாடசாலைகளில் வெறும் அறிமுறையான கல்வியைக் கற்று மனனம் செய்து தேர்வில் நன்றாக எழுதிச் சான்றிதழ் பெற்ற பலர் வாழ்வில் செயல் மூலமாக பிரச்சனைகளை வெல்லமுடியாமல் உள்ளனர். எனவே எந்தொழிலையும் கற்குமொருவராயினும் கற்பிக்கும் நிறுவனமாயினும் செயலனுபவக் கல்விக்கு முக்கியமளிக்க வேண்டியதவசியமாகின்றது.

## 2.3. தொழில்சார் மனப்பாங்கு

வேலையுலகைப்பற்றிய நல்மனப்பாங்கை விருத்தி செய்வதில் பாடசாலைக்கல்வி முறைமை, சமூகம், வீடு, சமயதாபனங்கள் பெரும்பங்காற்றுகின்றன. தொழில் பற்றிய நல்மனப்பாங்கு இல்லாதவரால் தொழிலைத் தேடிக்கொள்வது சாத்தியமாவதில்லை. விருப்பின்றித்தெரிவு செய்யும் தொழிலில் ஒருவர் மிளிர்வதுமில்லை. நிலைப்பதுமில்லை. எனவே பாடசாலைக்கல்வி பயிலும், தொழிற்கல்வி நிறுவனங்களாயினும், கல்வித்திட்டத்தில் மனப்பாங்கு விருத்திக்கும், இடமளிப்பதன் மூலமும், மாணவர் அத்திட்டத்தை முறையாகப் பின்பற்றுவதன் மூலமும் வேலையுலகில் பிரவேசிப்பது இலகுவாகின்றது.

## 2. வேலையுலகம்

வேலையுலகம் என்பது மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளும் செயற்பாடுகளாகும். இச்செயற்பாடுகள் நேரடியான வருமானத்தை அல்லது பயனைத் தருவதாகவும் இருக்கலாம். அல்லது மறைமுகமான பயனைத் தருவதாகவும் இருக்கலாம். இம்முயற்சிகளையே வேலையுலகம் என்கிறோம். இவ்வுலகம் உடலுக்கு உழைப்பையும், திருப்தியையும் தருகிறது. உள்ளத்துக்கு வேலையும் திருப்தியும் தருகிறது. வேலை மற்றும் செய்து ஓய்வெடுக்க வழிசெய்கிறது. உதாரணமாக உணவு, உடை ஏனைய தேவைகளுக்காக வேளாண்மைத் தொழிலும், போக்குவரவு, தொலைத்தொடர்பு பொழுதுபோக்கு, உறைவிடம், போன்ற பல தேவைகளை நிறைவு செய்ய தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான தொழில்களை தொழிற்துறைகளாக வும் வகைப்படுத்தமுடியும்.

### 3.1. பிரதான தொழிற்துறைகள்

1. வேளாண்மைத்துறை
2. கடற்தொழிற்துறை
3. உலோகத் தொழிற்துறை
4. புடவையும், உடையமைத்தல்துறை
5. மரத்தொழிற்துறை
6. வனைதற்தொழிற்துறை
7. எலெத்திரனியற்தொழிற்துறை
8. இரசாயனைத்தொழிற்துறை
9. கண்ணாடித்தொழிற்துறை
10. உணவுத்தொழிற்துறை
11. வர்த்தகத் தொழிற்துறை
12. கல்வித்துறை
13. பொதுச் சேவைத்துறை
14. வைத்தியசேவைத்துறை
15. கட்டடத்தொழிற்துறை
16. பனைத்தொழிற்துறை
17. தென்னைத்தொழிற்துறை
18. உல்லாசப்பயணத்துறை
19. கலைத்துறை
20. மின்சாரவேலைத்துறை
21. போக்குவரவு.

3.2. தொழிலுலகம் பற்றிய அறிவின் முக்கியத்துவம்

வேலையுலகம்பற்றிய அறிவை நாம் விருத்தி செய்து கொள்வதன்மூலம் பின்வரும் நன்மைகளைப் பெறலாம்.

1.. தமது சிறப்பாற்றலுக்கும், விருப்புக்கும் அமைவாகத் தொழிலைத் தெரிவு செய்யலாம்

2. தொழில் வாய்ப்புக்களுக்குத் தேவையான தகைமைகளை யடையவிரும்பும் ஒருவருக்கு வழிகாட்டியாகவிருக்கலாம்.

3. தொழில் அல்லது தொழிற்கல்விக்கான கல்வி வழிகாட்டலைச் செய்யும் ஒருவருக்கு தமது தொழிலைத் திறம்படச் செய்ய உதவும்.

4. பாடசாலைகளில் மாணவர்களுக்கான சிறப்புக்கல்வியை வழிகாட்டப் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் உதவும்.

5. எற்கனவே ஒரு தொழிலில் உள்ள ஒருவர் தமது தொழிலை விருத்தி செய்து கொள்ள அல்லது அடுத்த உயர்படிப்புக்களைத் தேடிக்கொள்ள விரும்புவருக்கும் உதவும்.

ஒவ்வொரு தொழிற்துறையும் பல்வேறு பிரிவுகளையும் உபபிரிவுகளையும் கொண்டவைாகவும் உள்ளன. ஒவ்வொரு உப பிரிவிலும் கூடப் பல்வேறு பதவியணிகள் உள்ளன..

யா/ சரவணை — நாகேஸ்வரி (...) வித்
வேலணை
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

## 3.3. பிரதான தொழிற்துறையும் உபபிரிவுகளும் உற்பத்தி வகையும் பதவியணிகளும்

வேளாண்மைத்துறை பிரதானமாக நான்கு பிரிவுகளைக் கொண்டது.

1. பயிர் வேளாண்மை
2. விலங்கு வேளாண்மை
3. பறவை வேளாண்மை
4. மீன் வேளாண்மை

### பயிர் வேளாண்மை

1. நெற்செய்கை
2. சிறு தானியச் செய்கை
3. காய்கறிச் செய்கை
4. பழச்செய்கை
5. இலைக்கறிச்செய்கை
6. எண்ணெய் கறிச்சரக்குச் செய்கை
7. தெங்கைச்செய்கை
8. மூலப்பொருளுக்கான பயிர்கள், விளைவித்தல்

மேற்கூறிய எல்லாப் பிரிவுகளிலும் பின்வரும் பதவியணிகளாகவுள்ளன.

| | சாதாரண அடிப்படைத்தரம் |
|---|---|
| 1. நிலம் பண்படுத்துபவர் - தொழிலாளி | 5ம் தரம் |
| 2. உழுபவர் - மாட்டுழவை, ட்ராக்டர் ஓட்டுனர் | 8ம் தரம் |
| 3. விவசாய செய்கையாளர் | 8ம் தரம் |
| 4. இறைப்பவர் | 8ம் தரம் |
| 5. மருந்து விசிறுபவர் | 8ம் தரம் |

| | | |
|---|---|---|
| 6. | களைகட்டல் -அறுவடை செய்வோர் | 8ம் தரம் |
| 7. | முதலீடு செய்பவர் | 10ம் தரம் |
| 8. | பண்ணை மேற்பார்வையாளர் | 10ம் தரம் |
| 9. | பண்ணைக் கணக்குப் பதிவாளர் | 10ம் தரம் |
| 10. | விற்பனையாளர் | 10ம் தரம் |
| 11. | விவசாய பண்ணை ஆலோசகர்/ போதனாசிரியர் | க.பொ.த உயர்.விவசாயம் |
| 12. | விவசாய விரிவாக்க உத்தியோகத்தர். | விவசாயப் பயிற்சி பெற்றவர் குறுட காலை. |
| 13. | விவசாயப்பண்ப்பாளர் | பட்டதாரி-விவ. |
| 14. | விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர். | " " |

விலங்கு வேளாண்மை

பன்றி, முயல், ஆடு, மாடு, எருமை போன்ற பயன் தரு விலங்குகளை வேளாண்மை ( -வளர்த்தல்) செய்தலைக் குறிக்கும்.

இவ் வேளாண்மை நடவடிக்கைகளில் பின்வரும் பதவியணிகள் உள்ளன.

| | | அடிப்படைத் தராதரம் |
|---|---|---|
| 1. | விலங்கு பராமரிப்பாளர் | 5ம் தரம் |
| 2. | விலங்கு சினைப்படுத்துபவர். | க.பொ.த. விசேட பாடம். |
| 3. | விலங்கியல் வைத்தியர் | பட்டதாரி |
| 4. | பால் கறவையாளர் | 5ம் தரம் |
| 5. | பால் விநியோகிப்பவர் | 5ம் தரம் |
| 6. | பால் பதப்படுத்துபவர் | 5ம் தரம் |

| | |
|---|---|
| 7. பாற்பொருளுற்பத்தியாளர் | க.பொ.த.சா.த. |
| 8. இறைச்சியடிப்பவர் | 5ம் தரம் |
| 9. இறைச்சி விற்பனையாளர் | 8ம் தரம் |
| 10. தோல் பதனிடுபவர் | 8ம் தரம் |
| 11. பண்ணை மேற்பார்வையாளர் | க.பொ.த. உயர்.விசேட விவசாயப் பயிற்சி. |
| 12. பண்ணை மேற்பார்வையாளர் | " " |
| 13. பண்ணை விரிவாக்க உத்தியோகத்தர் | " " |
| 14. பண்ணைக் கல்லூரிப் போதனாசிரியர் | பட்டதாரி விவசாயம், விலங்கியல் |
| 15. பண்ணைக் கல்லூரி அதிபர் | " |
| 16. விலங்குணவு உணவுப் பயிரிடுபவர் | 10ம் தரம் |
| 17. கால்நடைப்பண்ணை-பணிப்பாளர் | பட்டதாரி |
| 18. பால் மா உற்பத்தியாளர் | " |
| 19. கால்நடை உணவு தயாரிப்பாளர் | -10ம் தரம் |
| 20. விற்பனையாளர் - உணவு/விலங்கு/ பாற்பொருள் | -10ம் தரம் |
| 21. பண்ணை முகாமையாளர் | -பட்டதாரி/ க.பொ.த.உ. |
| 22. பண்ணை உபகரணங்கள் விற்பனையாளர் | க.பொ.த. சா/த |
| 23. தாவர வளமாக்கிகள், நாசினிகள் ஏனைய இரசாயனப் பொருட்கள் விற்பனை | " |
| 24. பண்ணை எந்திரங்கள் திருத்துனர் | 8ம் தரம்- விசேடபயிற்சி. |

## கடற்றொழிற்துறை

கடற்றொழிலானது மீன், நண்டு, இறால், கணவாய், திருக்கை, இப்பி, கடலட்டை போன்ற உணவுக்கான உயிர்களைப்பிடிக்கும் தொழில் உட்பட இன்னும் பல பக்க தொழிற்பிரிவுகளையும் உடையது. அவையாவன;

1. உப்பு விளைவித்தல்
2. முத்து குளித்தல்
3. கடலிலிருந்து அழகுப்பொருட்களைச் சேகரித்தல்
4. வள்ளம்/கப்பல்/ போக்குவரவுச் சேவை நடாத்துதல்
5. கப்பல்/வள்ளம் கட்டும் தொழில்
6. பனிக்கட்டி தயாரித்தல்
7. வலைதயாரித்தல்.
8. மீன்பிடியுபகரணங்களை தயாரித்தல்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

### உப்பு விளைவித்தல்:

இப்பிரிவில் பல்வேறு பதவியணியினர் தொழிலாற்றுகின்றனர்.

| | |
|---|---|
| 1. உப்பள முகாமையாளர் | பட்டதாரி |
| 2. உப்பள மேற்பார்வையாளர்/முகாமி | க.பொ.த.உயர். |
| 3. உப்பு விளைவிப்பவர் | ஆண்டு 5 |
| 4. உப்பள ஆய்வுகூட உதவியாளர் | க.பொ.த.உயர் (விசேட பயிற்) |
| 5. உப்பள உதவியாளர் | ஆண்டு 10 |
| 6. களஞ்சியப் பொறுப்பாளர் | க.பொ.த. |
| 7. வாகன இயக்குநர் | ஆண்டு 8 |
| 8. விற்பனை முகாமையாளர் | பட்டதாரி-இரசாயன. |
| 9. விற்பனையாளர் | பட்டதாரி. |

## முத்துக்குளித்தல்

இத்தொழில் ஆதியில் மன்னார் கடற்பிரதேசத்தில் மிகப்பிர பல்யம் பெற்றிருந்தது. இன்றும் நிறைய வாய்ப்புகளை தொழிலாகும்.

| | |
|---|---|
| 1. முத்துக்குளிப்பவர் | ஆண்டு 5 |
| 2. வள்ள வோட்டிகள் | ஆண்டு 10 |
| 3. தர நிர்ணயம் செய்வோர் | ஆண்டு 10 (விசேடபயிற்) |
| 4. முத்துத் தொழில் முகவர் | ஆண்டு 10 |
| 5. முத்து ஆபரணங்கள் செய்வோர் | ஆண்டு 08 (விசேடதொழி. பயிற்சி) |
| 6. முத்து விற்பனையாளர் | ஆண்டு 10 |
| 7. முத்துப் பிரித்தெடுக்கும் உதவியாளர் | ஆண்டு 08 |
| 8. கடலுபகரணங்கள் விற்பனையாளர் | ஆண்டு 10 |

## கடலில் இருந்து பல்தேவைக்கான பொருட்களைச் சேகரிப்போர்

சங்கு, கடற்பூக்கள், முருகைக்கல், சிப்பி, சோகி, கடற்பாசி, கடற்சாதனை போன்றவையும் கடற் கரையோரங்களிலிருந்து சிப்பிகள் இல்மனைற் போன்றவையும் பெறப்படுகின்றன. சங்கு கடற்பூக்கள் சிப்பி சோகி போன்றன மேசையில் வைப்பதற்கான அழகு பொருட்களாகவும் ஆபகரணங்களாகவும் ஆக்கப்படுகின்றன. இறந்த சிப்பிகள் விற்பனைக்குதவாத சங்குகளும், முருகைக் கற்களும், சுண்ணாம்புக்குத் தேவைக்காகப் (வெள்ளை யடிக்கவும், மனிதர், கால்நடை உணவுக்குத் தேவைக் காகவும் பயன்படுத்தப்படுகிறது.

3. <u>பறவை வேளாண்மை</u>

கோழி, வாத்து, புறா, குருவிகள், போன்ற பறவைகளை வேளாண்மைசெய்யும் இத்தொழிற்பிரிவில் பின்வரும் பதவிகள் உண்டு.

| | | |
|---|---|---|
| 1. | பண்ணைப்பராமரிப்பாளர் | 5ம் தரம் |
| 2. | பறவை/கால்நடை வைத்தியர் | பட்டதாரி (விவ.) |
| 3. | இறைச்சி அடிப்பவர் | 5ம் தரம் |
| 4. | பறவை, இறைச்சி விற்பனையாளி | 5ம் தரம் |
| 5. | பண்ணை மேற்பார்வையாளர் | க.பொ.த.உயர் தரம், பண்ணைப் பயி. |
| 6. | பண்ணை முதலீட்டாளர் | " |
| 7. | பண்ணை முகாமையாளர் | பட்டதாரி<br>க.பொ.த.உயர்<br>பண்ணை பயிற்சி |
| 8. | பறவைக்கான உணவு உற்பத்தியாளர் | " |
| 9. | முட்டை விற்பனையாளர் | |
| 10. | பறவைகள் உணவு, மருந்துகள், உப கருவிகள் விற்பனையாளர் | க.பொ.த. |
| 11. | குஞ்சு பொரிக்கும் எந்திர இயக்குனர் | " |

4. <u>மீன் வேளாண்மை</u>

மீன் வேளாண்மை கடல் மீன்பிடி, நன்னீர் மீன் பிடித்தொழில் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

## நன்னீர், கடல்நீர் மீன்பிடித்தொழில்

இத்தொழிலானது பின்வரும் தொழிற்பிரிவுகளைக் கொண்டது;

| | | |
|---|---|---|
| 1. | மீன்பிடித்தொழில் முதலாளி | - ஆண்டு 11 |
| 2. | வள்ளம் தயாரிப்பவன் | - " |
| 3. | வலைபின்னுவோன் | - ஆண்டு 08 |
| 4. | வள்ள ஓட்டுனர் | ஆண்டு 08 |
| 5. | மீன்பிடிப்பவர் | - ஆண்டு 05 |
| 6. | வள்ள உதவியாளர் | ஆண்டு 05 |
| 7. | மீன் விற்பனையாளர் | ஆண்டு 08 |
| 8. | கடலட்டை பிடிப்பவன் | ஆண்டு 05 |
| 9. | கடலட்டை பதனிடுபவர் | ஆண்டு 10 |
| 10. | மீன் கடலட்டை விற்பனையாளர் | ஆண்டு 08 |
| 11. | கடலுணவு பதனிடல் | ஆண்டு 10 |
| 12. | பனிக்கட்டி தயாரிப்பவர் | ஆண்டு 08 |
| 13. | ஆய்வுகூட உதவியாளர் | க.பொ.த.உயர்தரம் (விசேடபயிற்சி |
| 14. | விற்பனையாளர் | க.பொ.த.உயர்தரம் |
| 15. | வள்ள எந்திர திருத்துனர் | க.பொ.த. |
| 16. | வள்ள உதிரிப்பாக விற்பனையாளர் | " |
| 17. | கருவாடு பதனிடுபவர் | ஆண்டு 05 |
| 18. | வாகன ஓட்டுனர் | ஆண்டு 08 |
| 19. | கணக்குப்பதிவாளர் | க.பொ.த. |
| 20. | ஏலம் கூறுபவர் | க.பொ.த. |
| 21. | எழுதுவினைஞர் | க.பொ.த |
| 22. | பதனிடும் தொழிலக எந்திரங்கள் வடிவமைப்பவர், திருத்துனர் | தொ.அ.உ.பயி. பட்டதாரி எந்திரவியல் |
| 23. | பதனிடும் தொழிற்கூட ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | க.பொ.த.உய. விசே.பயி. |

சங்கு சேகரித்து வெளிநாடுகளுக்கு ...விற்கும் தொழில் முற்காலத்தில் மிகப்பிரபல்யமாகவிருந்தது. இன்னும் சந்தைவாய்ப்புள்ளது. முத்துக்குளிக்கும் தொழிலில் உள்ள வேலை, பதவிகள் இப்பிரிவிலும் உண்டு.

<u>அழகுப் பொருள் தயாரிப்பில் உள்ள பதவியணிகள்</u>

| | |
|---|---|
| 1. சங்கு சோகி, கடல்பூ தரம்பிரிப்போர் | ஆண்டு 8 |
| 2. அழகுபடுத்துவோர் | " |
| 3. வடிவமைப்போர் | " |
| 4. அரைப்பவர் | " |
| 5. விற்பனையாளர் | ஆண்டு 10 |

<u>சுண்ணாம்பு தயாரிப்புத் தொழில்</u>

| | |
|---|---|
| 1. சூளையிடுபவர். | ஆண்டு 05 |
| 2. சூளை முகாமையாளர் | ஆண்டு 10 |
| 3. சுண்ணாம்பு பொதிசெய்பவர் | ஆண்டு 05 |
| 4. சுண்ணாம்பு விற்பனையாளர் | ஆண்டு 10 |
| 5. சுண்ணாம்பு தரம் பிரிப்போர் | ஆண்டு 08 |

<u>இல்மனைட் சேகரித்தல்</u>

| | |
|---|---|
| 1. இரசாயனவியலாளர் | பட்டதாரி |
| 2. ஆய்வுகூட உதவியாளர் | க.பொ.த.உயர். விசே.பயி. |
| 3. இல்மனைட் சேகரிப்பாளர் | ஆண்டு 08 |
| 4. ஆற்றி இறக்குபவர் | ஆண்டு 05 |

## விலங்கு, பறவைகளுக்கான மீனுணவு தயாரித்தல் தொழில்

| | | |
|---|---|---|
| 1. | மீன் கழிவுகளைச் சேகரிப்பவர் | ஆண்டு 5 |
| 2. | மீன் பழிவுகளைப் பதப்படுத்துபவர் | ஆண்டு 05 |
| 3. | வெப்பமேற்றி இயக்குனர் | ஆண்டு 10 |
| 4. | அரைப்பவர் | ஆண்டு 08 |
| 5. | இரசாயனி | பட்டதாரி. இரயா. |
| 6. | கலவையாக்குபவர் | ஆண்டு 10 |
| 7. | அவிப்பவர் | ஆண்டு 08 |
| 8. | பொதியடைப்பவர் | ஆண்டு 10 |
| 9. | விற்பனையாளர் | ஆண்டு 10 |
| 11. | முகாமையாளர் | பட்டதாரி/க.பொ.த. உயர்தரம் |
| 12. | வேலைத்தல மேற்பார்வையாளர் | க.பொ.த.உயர். தொ.நு.சா. |

## கப்பல்/ வள்ளம் கட்டும் தொழில்

இத்தொழில் பாரம்பரியமாகத் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டதாகும். +1800களில் இங்கிருந்து அமெரிக்காவுக்கு வள்ளம் ஓட்டிச் சென்ற வரலாறு உண்டு. மீன்பிடித்தல், முத்துக்குளிப்பு, பொருட்களை ஏற்றி இறக்கல், மக்களை ஏற்றி இறக்கல், ஆகிய பல்வேறு தொழில்களுக்கு ஏற்ற வள்ளம், அல்லது கப்பல் கட்டும் தொழிலில் எமது மக்கள் அன்றிலிருந்து வல்லவர்களாக இருந்தனர். எந்திரவியல், கடலியல் கணித அறிவு, தொழில்நுட்பம் போன்ற பல்வேறு அறிவுகளின் தொகுப்பே இத்தொழில் நுணுக்கமாகும்.

## இத்தொழிலில் உள்ள பதவியணிகள்

| | |
|---|---|
| 1. தொழிலக முகாமையாளர் | பட்டதாரி எந்திரவியல் |
| 2. வடிவமைப்பாளர் | " |
| 3. படவரைஞர் | க.பொ.த.உ.விசே. பயிற்சி. |
| 4. மரமரிப்வர் | ஆண்டு 10 விசே.பயி. |
| 5. வள்ளம் கட்டுபவர் | ஆண்டு 10 " |
| 6. உலோகப் பொருத்துக்கள் செய்பவர் | " " |
| 7. இயந்திரம் பொருத்துனர் | " " |
| 8. மின்னியலாளர் | " " |
| 9. நிறம் தீட்டுபவர் | " " |
| 10. வள்ளம் திருத்துனர் | " " |
| 11. வள்ளமோட்டி/சாரதி | " " |
| 12. வள்ள உதவியாளர் | " " |
| 13. வள்ள எந்திர இயக்குநர் | |
| 14. | |

## கப்பல்/வள்ள போக்குவரத்துச் சேவையில் உள்ள பதவியணிகள்

| | |
|---|---|
| 1. வள்ளமோட்டி | ஆண்டு 10 விசே.பயி. |
| 2. வள்ள எந்திர இயக்குநர் | " " |
| 3. வள்ள/கப்பல் பொறுப்பாளர் | " " |
| 4. ஏற்றி இறக்குபவர் | ஆண்டு 05 |
| 5. நிறுவன முகாமையாளர் | பட்டதாரி/க.பொ.த. உயர்தரம் |

6. நிறுவன மேற்பார்வையாளர் — பட்டதாரி/ க.பொ.உயர்தரம்

7. நிதியாளர் — க.பொ.த.உயர் கணக்காளர் பயிற்.

8. பதிவாளர் — க.பொ.த.உயர்.

9. எழுதுவினைஞர் — க.பொ.த.

உலோகத் தொழிற்துறை

இத்துறையானது பல்வேறு தொழிற்பிரிவுகளையும் உடைக்கியது. உலகில் இத்தொழிலகத்தில் முன்னணி வகிக்கும் நாடுகள் பலவுண்டு. சிலநாடுகள் உலோக நாதப்பொருட்களைக் கொண்டிருப்பதால் அவற்றை வெட்டியெடுத்து உலோகப்பாகங்களை உருவாக்கியும் இரும்பு மூலப்பொருட்களை வடிவமைத்துச் சட்டங்களா கவும், தழாய்களாகவும் தகடுகளாகவும், ஏற்றுமதி செய்கின்றனர். சில நாடுகள் உலோக மூலப் பொருட்களைக் கொண்டு இயந்திரசாதனங்களை வடிவமைத்து விற்பனை செய்து பொருளீட்டுகின்றார்கள்.

உலோகவியல், உலோக எந்திரவியல், கணிதம், வித்தானம் வடிவமைப்பு, இரசாயனவியல், மின்னியல் ஆதிய அறிவுகளின் தொகுப்பே உலோக வேலைத் தொழில் நுணுக்கமாகும். பல நூற்றாண்டுகளாக எமது நாட்டிலும் இத்தொழில் பாரம்பரியமாக மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளது. இங்கு மிக நுணுக்கமான தும், தரமானதுமானதும் கலைநுட்பம் வாய்ந்ததுமான பொருட்கள் செய்யக்கூடியவல்லவர் இருந்துள்ளனர்.

இன்னும் உள்ளனர். காலத்துக்குக் காலம் ஏற்பட்டுவரும் தொழில்நுட்பவிருத்திக்கேற்ப எமது பிரதேசத்திலும் இந்நுணுக்கம் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இன்னும் இத்தொழிலின் தேவையளவு இங்கு உயர்ந்துள்ளது.

## உலோகத் தொழிற்றுறை பிரதான பிரிவுகளும் உப பிரிவுகளும்

1. தாதுக்கள் வெட்டியெடுத்தல்
2. இரும்பு உருக்குசாலைத்தொழில்
3. இரும்புப் பொருட்களாக்கல்

எமது பிரதேசத்தில் இதுவரை உலோகத்தாது கண்டுபிடிக்கப்படாததால் மேற்கூறிய பிரதான பிரிவுகளில் உலோகப் பொருட்களாக்கும் தொழிலே முக்கியத்துவம் பெறுகிறது.

உலோகப் பொருட்களை ஆக்குவதில் பல்வேறு தொழில்நுட்பங்கள் பின்பற்றப்படுகின்றன.

### 1. வார்ப்புச் செய்தல்

வார்ப்பிரும்பு, செம்பு, பித்தளை, அலுமினியம், தங்கம், போன்ற உலோகங்களைக் கொண்டு ஆக்கப்படும் பல் தேவைப்பொருட்களை வார்ப்பு முறையில் ஆக்கப்படுகின்றன. பருமட்டாக வார்க்கப்படும் பொருட்கள் கடைசல், மினுக்குதல், முலாமிடல் ஆகிய செயற்பாடுகளுடாகவும் முடிவுப் பொருளாக்கப்படும்.

பொதுசன ... யாழ்ப்பாண...

<u>இப்பிரிவில் உள்ள பதவியணிகளாவன;</u>

1. வடிவமைப்பாளர் - பட்டம் -எந்திரவியல்
2. வரைபடம் கீறுபவர் க.பொ.த.உயர்தரம் (விசேட பயிற்சி)
3. மாதிரியச்சு அமைப்பவர் - ஆண்டு 11
4. மணல் அச்சு அமைப்பவர் ஆண்டு 11
5. வார்ப்புச் செய்பவர் ஆண்டு 11
6. சூளை இயக்குநர். ஆண்டு 08
7. வார்ப்பக மேற்பார்வையாளர் க.பொ.த.உயர் விசேட பயிற்சி.
8. வார்ப்பக முகாமி "
9. வார்ப்பக எந்திரி எந்திரவியல் பட்டதாரி

இப்பிரிவில் வார்க்கப்படும் பொருட்கள் உலோக வேலைத்தொழிற்கூடத்திற்கு ஏனைய வேலைகளுக்காக அனுப்பிவைக்கப்படும்.

உலோகவேலைத் தொழிலகமானது பின்வரும் பதவியணிகளைக் கொண்டிருக்கும்.

1. வேலைத்தல எந்திரி - எந்திரவியல்-பட்டதாரி
2. வேலைத்தல முகாமி - க.பொ.த.உயர்தரம் விசேட பயிற்சி
3. வேலைத்தல மேற்பார்வையாளர் "
4. பிரிவுப் பொறுப்பாளர் "

ஒரு வேலைத்தலம் பின்வரும் உப பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

1. திட்டமிடல் பிரிவு
2. உற்பத்திப்பிரிவு,

2.1. சட்டவேலை
2.2. துளையிடல்
2.3. கடைசல்
2.4 மின் ஒட்டு வேலை
2.5 வாயு ஒட்டுவேலை
2.6 வடிவமைக்கும்பிரிவு
2.7. முடிப்புவேலை
2.8 நிறம் தீட்டல்
2.9. மின்சார வேலைப்பிரிவு
2.10 சோதனைப்பிரிவு
2.11. பாகங்கள் உற்பத்திப்பிரிவு
2.12. கம்மாலை வேலைப்பிரிவு
2.13 தகட்டு வேலைப்பிரிவு
2.14 கணக்குப்பதிவுப் பிரிவு.
2.15 விற்பனை விளம்பரப்பிரிவு

<u>இப்பிரிவில் காணப்படும் பதவியணிகள்</u>

| | | |
|---|---|---|
| 1. | திட்டமிடல் எந்திரி | பொறியியல்-பட்டதாரி |
| 2. | வடிவமைப்பாளர் | " " |
| 3. | பொறிகள் வடிவமைப்பாளர் | " " |
| 4. | கனிய வேலையாளர் | க.பொ.த.உயர். விசேட.பயி. |
| 5. | பொருத்துனர் | ஆண்டு 11. |
| 6. | துளையிடுபவர் | " |
| 7. | கடைபவர் | " |
| 8. | ஒட்டுனர் - மின் | " |
| 9. | ஒட்டுனர் - வாயு | " |

10. முடிப்பவர், அரைப்பவர் — ஆண்டு 11

11. நிறந்தீட்டுனர் — 〃

12. மின்னிணைப்பாளர் — 〃

13. மின்உபகரணத் திருத்துனர் — 〃

14. பரிசோதனையாளர் — 〃

15. பாகங்களை உற்பத்தி செய்யும் எந்திரங்களைக் கையாள்பவர்கள் — 〃

16. கம்மாலையாளர் — 〃

17. தகட்டு வேலையாளர் — 〃

18. விற்பனை, விளம்பர முகாமையாளர் — பட்டதாரி (முகாமைத்துவம்)

<u>புடவையும் உடையமைத்தலும்</u>

எமது நாடு உஷ்ண வலயத்தில் உள்ளதால் பருத்தியே ஆடைக்கேற்ற மூலப்பொருளாகும். எனினும் தொழில்நுட்பவளர்ச்சியின் காரணத்தினாலும் உடையின் பாவனைத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கிலும் செயற்கை நார்களைக் கொண்ட புடவைத்தொழிலும், நாகரிகத் தேவைகளையும்மையமாகக் கொண்டும் உடையமைத்தல் தொழிலும் வளர்ச்சி கண்டுள்ளது. உள்ளூர் தேவைகளையும் ஏற்றுமதித் தேவைகளையும் மையமாகக் கொண்டு இத்தொழில் விருத்தியடைய வாய்ப்புண்டு. பஞ்சை இறக்குமதி செய்த இங்கிலாந்தில் லங்காசியரில் பருத்தி ஆடைத்தொழில் சிறப்பாக நடைபெறுவதை அவதானிக்கும்போது பருத்தி வளர்ப்பதற்கான சுவாத்தியமும்

